# ஸ்தோவான், ஆவியால் நிறைந்த ஒரு மனிதன்

**ஆவியானவர் நம்மை மாற்றி வழிகாட்டட்டும்**

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் H5b யை வாசிக்கவும்.



**ஜெபம்:** உங்கள் மனதைப் புதிதாக்கும் படியாகவும், கிறிஸ்துவைப் போல் ஆக்கும்படியாகவும் பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.

**பின்னணி:** யோவான் 14-16 ல், இயேசு, தாம் பரலோகம் சென்று வேறொரு தேற்றரவாளனை அனுப்புவதாகக் கூறினார். இயேசுவைப் போல பரிசுத்த ஆவியானவருக்கு உலகப்பூர்வமான சரீரம் இல்லை. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாழ்கிறார் (1 கொரி. 6:19 & யோவான் 14:17). அவர் எங்கே இருக்கிறார்? உங்களுக்குள்! அவர் உங்களை வழிநடத்துகிறார்! நீங்கள் மற்றவர்களுக்கு போதிக்கும் போது அவர் உதவி செய்கிறார். எது சரி எது தவறு என்பதை அவர் உணர்த்துகிறார்.

## 1. ஆவியானவர் நமக்குள் செயல் புரிவதை ஸ்தோவானிடம் இருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

**காண்க:**

**அப். 6:1-7 :** எருசலேம் சபையில் ஸ்தோவான் செய்த பணி என்ன?

**அப் 6:3 :** இந்த வேலைக்காக அவர்கள் எத்தகைய மனிதர்களைத் தெரிந்து கொண்டனர்?

**அப். 6:8-16 :** ஸ்தோவானுக்கு எதிராக சாட்சி கொடுத்த மக்கள் எப்படிப்பட்டவர்கள்?

**அப்: 7** இஸ்ரவேலர்களின் வரலாற்றை ஸ்தோவானின் பிரசங்கத்தில் இருந்து அறிந்து கொள்க.

**அப். 7:57-59:** ஸ்தேவானின் வார்த்தையைக் கேட்டு தலைவர்கள் எவ்வாறு நடந்து கொண்டனர்?

**அப். 7:60:** அவர்களது கோபத்தையும் வன்முறையையும் ஸ்தேவான் எவ்வாறு எதிர்கொண்டான்?

இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் செய்யும் **எட்டு காரியங்கள்:**

1) **யோவான் 14:26,** புரிந்து கொள்ள எவ்வாறு உதவுகிறார்.

2) **யோவான் 16:8,** நம்மைப் பற்றி என்ன உணர்த்துகிறார்.

3) **அப். 1:8,** என்ன செய்வதற்காக பலம் அளிக்கிறார்.

4) **ரோமர் 8:11-14,** நமக்கு என்ன செய்கிறார்.

5) **ரோமர் 8:15-17,** நமக்கு என்ன உறுதி அளிக்கிறார்?

6) **எபே. 1:13-14,** நமது நித்திய இரட்சிப்புக்கு எவ்வாறு உறுதி அளிக்கிறார்.

7) **1 கொரி. 12:1-12,** சேவை செய்ய தேவையானதை எவ்வாறு அளிக்கிறார்.

8) **1 கொரி. 12:13,** நித்தியமாக அவர் நம்மை எங்கு வைக்கிறார்.

*(பதில்கள் :*

*1) பரிசுத்த ஆவியானவர் நமக்கு எல்லாவற்றையும் போதிக்கிறார் (நமது மனதை பிரகாசிப்பிக்கச் செய்கிறார்),*

*2) நமது பாவங்களை உணர்த்துகிறார்.*

*3) இயேசுவுக்கு சிறந்த முறையில் சாட்சி அளிக்க வல்லமை தருகிறார்*

*4) நமக்கு புதிய, புனித வாழ்க்கை தருகிறார் (மறுபிறப்பு, தேவனுக்குள் புதிய, பரிசுத்த வாழ்க்கை),*

*5) இயேசுவோடு கூட நாம் தேவனின் பிள்ளைகள்; பரலோக வளங்களுக்கு வாரீசுகள் என்பதை உறுதி செய்கிறார்,*

*6) நமது பரலோக சுதந்திரத்தை முத்திரை போடுகிறார்.*

*7) கிறிஸ்துவின் ஏக சரீரத்துக்குள் நம்மை ஞானஸ்நானப்படுத்துகிறார்.*

*8) சரீரத்தை போதித்து போஷிப்பதற்காக வெவ்வேறு வகையான ஆவிக்குரிய வரங்களைத் தருகிறார்.*

## 2. அடுத்த வாரம் விசுவாசிகள் செய்ய வேண்டியதை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

- பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார்களா இல்லையா என்று நிச்சயமில்லாமல் இருக்கும் விசுவாசிகளை சந்தியுங்கள். அவர்களுக்காக ஜெபித்து, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள ஜெபிக்குமாறு கூறவும்.
- பரிசுத்த ஆவியின் கிரியைகளைப் பற்றி புரிந்து கொள்ளாமல் யாராவது இருந்தால், நமக்காக அவர் செய்யும் எட்டு காரியங்களை மேலே பட்டியல் இட்டவாறு விவரித்துக் கூறவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

தற்போதைய தேவைகளுக்கும் வட்டார பழக்கவழக்கங்களுக்கும் ஏற்ற நடவடிக்கைகளை தெரிந்து கொள்க

ஆராதனையின் போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை மாற்றும் படியும், நம்மை உண்மையுள்ள ஊழியக்காரர் ஆக்கும்படியும் **ஜெபிக்கவும்.**

கடந்த வாரத்தில் பரிசுத்த ஆவியானவரால் மக்கள் பெற்ற வெற்றிகளுக்காகவும் குணமாக்குதலுக்காகவும் தேவனைத் துதியுங்கள்.

**ஆவியின் கனிகளைப் பற்றி பேசுங்கள் அல்லது பாடுங்கள்.** பரிசுத்த ஆவியானவர் நமக்குள் உருவாக்கும் ஒன்பது பரிசுத்த கனிகளைப் பற்றி கவிதை எழுதுமாறு படைப்பார்வம் உடைய ஒருவரிடம் கூறவும். அவை கலாத்தியர் 5:22-23 ல் பட்டியல் இடப்பட்டுள்ளன.


அதற்கு யாராவது இராகம் போட்டால் விசுவாசிகள் யாவரும் பாடலாம்.

**ஸ்தேவானின் கதையைக் கூறவும்.**

குழந்தைகள் பின்னர் அதை நாடகம் ஆக்குவார்கள்.

**அப். 6, 7 (பகுதி 1) ல் உள்ள விஷயங்களைப் பற்றி விசுவாசிகளிடம் கேள்விகள் கேட்கவும்.**

பரிசுத்த ஆவியானவர் எப்படி நமது இருதயத்தை மாற்றுகிறார் என்பது பற்றி செய்து காட்டலாம். தேவனைத் **தேடுபவராக** ஒருவரும் **வாசல்காப்பவராக** ஒருவருமாக இரண்டு பெரியவர்கள் நடிக்கட்டும். தேடுபவர் தன் சட்டையில் ஒரு பாம்பின் படத்தை குத்திக் கொள்ளவும் (கீழே உள்ள படத்தை வரைந்து, இருதய வடிவில் வெட்டிக் கொள்ளவும்)



**வாசல் காப்பவர்:** (ஒரு புறம் நின்று சத்தகமாகப் பேச வேண்டும்).

**தேடுபவர்** : வாசல் காப்பவரை நோக்கி நடந்து செல்கிறார். சர்ப்பத்தின் படத்தை எல்லோரும் பார்க்க வேண்டும். சத்தமாகக் கூறவும், "வாசல்காப்பவரே! என்னைப் பரலோக ராஜ்யத்துக்குள் நுழைய விடும்!"

**வாசல் காப்பவர்:** தேடுபவரே! உங்கள் இருதயத்தில் வைத்து அந்தத் தீமையை உள்ளே கொண்டு வரக்கூடாது.

**தேடுபவர்** : எப்படி நான் பாவத்தை என் இருதயத்தில் இருந்து அகற்றுவது?

**வாசல்காப்பவர்:** (சத்தமாக 1 யோவான் 1:7-9 ஐ வாசிக்கவும்).

**தேடுபவர்** : நான் என் பாவத்தை அறிக்கை இட்டு இயேசு என்னை மன்னிக்குமாறு வேண்டுகிறேன். (சர்ப்பத்தைக் காட்டி) ஆனால் என்னுள் இருக்கும் இந்த அலங்கோலத்தை எவ்வாறு வெளியேற்றுவேன்.

**வாசல் காப்பவர்:** உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டாலும், பழைய பாம்பாகிய சாத்தானைப் பின்பற்றும் ஆசை உங்களிடம் இருக்கும் வரை பரலோகத்துக்குள் நுழைய முடியாது. பாவத்தைப் பற்றிய நினைவையே தேவன் பரலோகத்தில் அனுமதிக்க மாட்டார். பரிசுத்த ஆவியானவர் உங்கள் உள்ளத்தை மாற்ற நீங்கள் அனுமதிக்க வேண்டும் (கலா. 5:16-24 வாசிக்கவும்).

**தேடுபவர்** : வாசல்காப்பவரே! என்னுடைய பாவத்தைத் தமது இரத்தத்தால் கழுவுமாறு நான் இயேசுவைக் கேட்டேன். பரிசுத்த ஆவியானவர் இப்போது எனது பழைய பாவ சுபாவத்தை சிலுவையில் அறைய உதவி எனக்குள் அன்பையும் நற்பண்புகளையும் உருவாக்குகிறார் (சர்ப்பத்தின் படத்தை வீசுகிறார்).

**வாசல் காப்பவர்:** பரலோக ராஜ்யத்துக்குள் செல்லுங்கள்!

**மனன வசனம்:** (இணைந்து) யோவான் 14:15-16.

குழந்தைகளைக் கேட்க வேண்டியது: ஸ்தேவானைப் பற்றிய நாடகத்தை **அரங்கேற்றவும்,** தயாரித்த கேள்விகளைக் கேட்கவும்.

**கலந்துரையாடல்:** பரிசுத்த ஆவியானவர் நமக்கு செய்யம் எட்டு விஷயங்கள் பற்றிய பட்டியல்

(பகுதி 1).

இயேசு மரிப்பதற்கு முந்திய இரவு, வருத்தமுடன் இருந்த சீஷர்களிடம் தாம் பிரிந்து போகப்போவதாக கூறினார். இதை விளக்கி விட்டு, "நீங்கள் நேசிக்கும் ஒருவர் உங்களை விட்டு பிரியும் போது எவ்வாறு உணர்வீர்கள்" என்று கேட்கவும்.

இயேசுவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் இடையில் உள்ள அடையாள (ஒற்றுமையின்) இரகசியத்தை விளக்கவும். யோவான் 14:15-17 வாசியுங்கள்.

- இயேசு அவர்களைத் திக்கற்றவர்களாய் விடுவதில்லை என்று கூறினார். அவர் தேற்றரவாளனை அனுப்புவார்.
- இயேசு வாக்களித்தார்: "நான் உங்களைத் திக்கற்றவர்களாய் விடேன். உங்களிடத்தில் வருவேன்" (யோவான். 14:18).
- யோவான் 16:13-15 ஐ வாசிக்கவும். யோவான் 10:30 ல் "நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்" என்று இயேசு கூறினார். பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும், பரிசுத்த ஆவியாகிய தேவனும், தனித்தனி ஆட்களாக இருந்தாலும், மொத்தத்தில், திரியேக தேவனில் ஒன்றாய் இருக்கிறார்கள்.

**கர்த்தரின் பந்தியை அறிமுகப்படுத்த,** பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள், கூடாரத்தில் இருக்கு ஒரு மேசையில் பரிசுத்த சமூகத்து அப்பத்தை எவ்வாறு பரிமாறினர் என்பதை விளக்கவும். (யாத். 25:30). இப்போது நாமும் தேவ பிரசன்னத்தில் அப்பத்தைப் புசித்து, பரலோகத்தில் "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தில்" மீண்டும் புசிப்போம்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net